தொழிற்சாலைகளை அமைக்கும்போது அதிக அளவில் அமைக்கலாம் என்று நாம் இருக்கிறோம். நம்முடைய அரசுத் துறையில்கூட, விண்ணமங்கலத்திலேயே கிடைக்கின்ற மூலப் பொருட்களைக் கொண்டு இதுபோன்று லெதர் குட்ஸ் செய்யலாமா, அதற்கு வெளிநாட்டு உதவிகளைப் பெறலாமா என்ற முயற்சிகளையும் நாம் எடுத்து வருகிறோம்.

Leather Factory at Wallajapet

* 216 *Q*.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Inustries be pleased to state—

(*a*) whether there is any proposal to set up a leather factory at Wallajapet in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, இம் மாநிலத்தில் தோல் பதனிடும் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்பதை அரசு உணருகிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : லெதர் பாக்டரிகள்—தோல் பதனிடும் தொழிற்சாலைகள் ஏராளமாகத் தமிழ்நாட்டில் இருக்கின்றன. நாமும் விண்ணமங்கலத்தில் வைத்திருக்கிறோம். லெதர் பாக்டரியை வாலாஜாவில் வைப்பதைப்பற்றித்தான் நான் சொன்னேன்.

திரு. கே. ஏ. வகாப் : வாலாஜாபேட்டையிலும் அதன் அருகில் இராணிப்பேட்டையிலும் ஏராளமான தோல் பதனிடும் தொழிற்சாலைகள் தனிப்பட்டவர்களால் நடத்தப்படுகின்றன. அவை சில நேரங்களில் நவீன முறையில் இல்லாமையினால் அங்கே சுகாதாரக் கேடான முறையில் இருக்கின்றன. ஆகவே, நவீன முறையில் தொழில் கூட்டுறவுத் துறையில் ஒரு தோல் பதனிடும் தொழிற்சாலை அமைக்க இந்த அரசு ஆலோசனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவாளர்கள் முயற்சித்தால் உதவி செய்யலாம்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் புதிய நீதிமன்றங்கள்

* 217 வினா—திரு. க. சுப்பு : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், இராஜபாளையத்தில் ஒரு சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட்டும், ஸ்ரீவில்லிபுத்தூரில் ஒரு சப்-கோர்ட்டும் நிறுவும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

(இ) இம்மாவட்டத்தில், நடப்பு ஆண்டில் வேறு எந்தெந்த இடங்களில் நீதி மன்றங்களை நிறுவ அரசாங்கம் திட்டமிட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இராஜபாளையத்தில் ஒரு சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டு நிறுவுவதற்கான பிரேரணை இம்மாநிலத்திலுள்ள சிவில், கிரிமினல் நீதி மன்றங்களின் அதிகார வரம்பை நிர்ணயிப்பதற்காக

அமைக்கப்பட்ட குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஸ்ரீவில்லி புத்தூரில் ஒரு சப்-கோர்ட்டு நிறுவுவதற்கான பிரேரணை அரசின் பரிசீலனையில் உள்ளது.

(இ) இல்லை.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, இராமநாதபுரம் செஷன்ஸ் கோர்ட் மதுரையில் இருக்கிறது. அதை இராமநாதபுரத்திற்கே மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : புதிய சப்-கோர்ட்டுகள், புதிய ஜில்லா முன்சிப் கோர்ட்டுகள் அமைக்க வரதராஜன்—டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறதே, அது தன்னுடைய இடைக்கால சிபார்சைக் கொடுத்திருக்கிறதா? இல்லையென்றால் அதன் அறிக்கை எப்போது கிடைக்கும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நீதி மன்றம் அமைப்பதற்காக அந்தக் குழு அமையவில்லை. இருக்கின்ற நீதிமன்றங்களின் அதிகார வரம்பை நிர்ணயிப்பதற்காகவும், எந்த இடத்தில் நீதி மன்றம் மேலும் தேவைப்படலாம் என்பதைக் கண்டறிவதற்காகவும் தான் அது அமைக்கப்பட்டது. அது எந்த விதமான இடைக்கால அறிக்கையையும் தரவில்லை.

Cases of Thali snatching in Thanjavur District

* 208 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether a number of cases of gangs of men snatching "Thali" from the necks of married women have been reported from Thanjavur district around September 1970; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) குற்ற பரம்பரையைச் சேர்ந்த இரு குறவர் கூட்டத்தினர் ஒரு கூட்டத்தில் மூன்று பேரும் மற்றொன்றில் நான்கு பேரும் இருந்தனர். 1970-ல் தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டையிலும், அதைச் சுற்றியும் நிகழ்ந்ததாக அறிவிக்கப்பட்ட தாலிகள் பறிக்கப்பட்ட குற்றங்களுக்குப் பொறுப்பாளி யாவர். தாலிகள் அனைத்தும் மீட்கப்பட்டு, ஏழு குற்றவாளிகளும் தண்டிக்கப்பட்டனர்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இம்மாதிரி குற்றவாளிகள் தஞ்சை மாவட்டத்தில் மட்டுமல்ல. மார்ச் மாதத்தில் மதுரை மாவட்டத்திலேயே மாதிரியான சம்பவம் நடந்து, அதுவும் குற்ற பரம்பரையினர் செயல்கள் என தெரிகிறது. ஆகவே இதுபோன்ற வேலைகளைச் செய்கிறவர்கள் யார், என்பதை எல்லா மாவட்டங்களிலும் விவரங்களைச் சேகரிக்க போலீஸ் துறைப் புலனாய்வுப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துக்கொள்ள அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?